**இப்பாகமுவ பிரதேச சபையின் - 2022**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இப்பாகமுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து இப்பாகமுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சபை நிதியின் மூலம் நிறைவேற்றப்பட்ட 04 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 1,795,636 ஆக இருந்த போதிலும் கடன்கொடுத்தோராக ரூபா 1,685,221 கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் கடன்கொடுத்தோர் ரூபா 110,415 ஆல் குறைத்து கணக்பகீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் சபை நிதியத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட வளவ்வவத்தையின் 06 ஆவது ஒழுங்கைக்கு கொங்கிரீட் இடும் செயற்திட்டத்தின் கடன்கொடுத்தொர் ரூபா 399,998 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | முன்னைய ஆண்டில் கணக்கீட்டுக் குறைபாட்டின் கீழ் காட்டப்பட்ட கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 25,497,023 நிதி ஏற்பாட்டுப் பெறுமதியான 30 நிர்மாண வேலைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் அந்த நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்ததினாலான குறைபாட்டினை மீளாய்வாண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் சேதனப் பசளை தயாரிக்கும் கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 173,544 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோரை உறுதிப்படுத்திக்கொள்ளாது கணக்கீடு செய்யப்பட்டதனால் ரூபா 28,054,179 ஆல் கடன்கொடுத்தோரும் கடன்படடோரும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,878,350 பெறுமதியான சபையின் கலிபவுஸர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டின் போது காணி ஏல விற்பனையின் மூலம் பொதுச் செயற்பாடுகளுக்காக சபைக்கு கிடைத்த 02 காணித் துண்டுகளின் பெறுமதியான ரூபா 11,270,750 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 316,800 மொத்த பெறுமதியான 03 LED மொனிடர்களும் 03 Canon பிரின்டர்களும் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஐ) | மீளாய்வாண்டில் கொள்வனவு ெய்யப்பட்ட ரூபா 600,000 தொகையான நூல் நிலையப் புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 05 நூல் நிலையங்களின் தகவல்கள் 2023 ஆம் ஆண்டின் பொருள் மீளாய்விற்கு உள்ளடக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மொத்தமாக ரூபா 4,485,511 தொகையான 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகளுக்கும் பொருள் மீளாய்வு அறிக்கைகளில் காட்டப்படுகின்ற மீதிகளுக்குமிடையேயான வித்தியாசம் ரூபா 1,333,072 ஆகும். | அடுத்துவரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை -நி.பி 104(3) | சபையின் JCB இயந்திரத்திற்கு 2022 ஒக்தோபர் 13 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் விபத்து இடம்பெறுமாயின் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 33,796,101 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 37,232,056 ஆகும்.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் பொது வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டு முழுவதும் ரூபா 15 மில்லியனுக்கு மேற்பட்ட சராசரி மீதி நிறுத்திவைக்கப்பட்டிருந்ததனால் உயர்ந்த பிரதிபலன்கள் கிடைக்க வேண்டிய நிலையான வைப்புக்கள் போன்ற முதலீட்டு நிதி மூலங்களில் முதலீடு செயவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் நிதியை நிலையான வைப்பாக வைப்புச் செய்வதற்கு பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் அப்போது கிடைத்திருக்காததுடன் தற்பொழுது பணத்தை நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்வதற்கான தீர்மானம் மற்றும் முகாமைத்துவ குழுவின் தீர்மானம் கிடைத்துள்ளது. | சபையில் மிகை நிதி காணப்படுமாகவிருந்தால் சபைக்கு உயர்ந்த பிரதிபலன்கள் கிடைக்கும் பாதுகாப்பான நிதி மூலங்களில் முதலீடு செய்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தநிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 4,024 | 4,024 | 5,114 | 6,376 | 4,024 | 3,745 | 1,614 | 9,597 |
| வாடகை | 11,300 | 11,783 | 12,856 | 3,396 | 12,300 | 9,127 | 6,685 | 4,850 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 2,200 | 2,179 | 2,179 | - | 1,235 | - | - | - |
| ஏனைய வருமானம் | 11,315 | 9,550 | 67,046 | 28,652 | 158,438 | 140,252 | 76,438 | 149,590 |
| மொத்தம் | 28,839 | 27,536 | 87,195 | 38,424 | 175,997 | 153,124 | 84,737 | 164,037 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | **வீதவரியும் வரியும்** | | |
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 6,960,588 தொகையான வீதவரி நிலுவையில் ரூபா 4,309,193 பணத்தையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,024,359 தொகையான பட்டியலிடப்பட்டதில் ரூபா 1,772,362 பணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி தொடர்பான நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் துரிதமாக பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 802,518 தொகையான நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரி பதிவேட்டில் பெயர் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதனால் அந்த ஆதனங்களை இனங்காண முடியாதுள்ளது. | -மேற்படி- |

**வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மெல்சிரிபுர கடைகள் 2013 ஆம் ஆண்டில் கேள்வி கோரப்பட்டிருந்தும் 2019 ஆம் ஆண்டுவரை கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கடைகளின் மாதாந்த வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மாதாந்த மதிப்பீட்டிற்கு இணங்க 10 கடைகளிலிருந்து 2022 ஆம் ஆண்டிற்கு ரூபா 3,763,596 தொகை நிலுவை கடை வாடகை அறவீடு செய்ய வேண்டி இருந்தது. | வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்குச் சமர்ப்பித்து அவரின் ஆலோசனையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | கேள்வி கோரி குத்தகைக்கு வழங்கப்படுமாகவிருந்தால் குத்தகைப் பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 24 அலகு சொத்துக்களிலிருந்து ரூபா 1,711,276 மீதி அறவீடு செய்யப்பட வேண்டி இருந்தது. | சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அறவிட வேண்டிய 24 ஆதனங்களில் 02 ஆதனங்களுக்காக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதுடன் ஹிரிபிடிய இலக்கம் 02 மீன்கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 16,000 பணம் தற்போது அறவிடப்பட்டுள்ளது. | சொத்துக்களை குத்தகைக்கு வழ்குவதன் மூலம் கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு டிசய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 11 காணிகளும் கட்டிடங்களும் மீளாய்வாண்டு வரை மதிப்பீடு செய்யப்படாததனால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் உரிய ஆதனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி உள்ளடக்கப்படும். | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் (புரனெகும) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முழுமையான ஒத்துழைப்பில் சபை அதிகாரப் பிரதேசத்தில் குடிநீர் தேவைப்பாடுள்ள 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு மாற்றுநீர் மூலமாக 5000 லீற்றர் மற்றும் 2000 லீற்றர் கொள்லளவுள்ள 73 நீர் தாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டு பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த நீர்தாங்கிகளை ஸ்தாபித்தல் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் நீரினை பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான 03 நீர் பவுஸர்கள் 2021 ஆம் ஆண்டின் போதே வழங்கப்பட்டன. ஏனைய நீர் வழங்கல் மூலங்களிலிருந்து நீர்த் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு நிர்ப் பாவனையாளர் நடவடிக்கை எடுத்ததன் மூலம் இச்செயற்திட்டத்திலிருந்து எதிர்பாரத்த பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்படாது கைவிடப்பட்டன. | குடிநீர் தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்து பார்க்கும் போது இந்த முதலீடுகள் 100 சதவீதம் பெறுபேறுகள் அற்றதாகும். | ஒரு செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நீர்த்தாங்கியை வினைத்திறனாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சேதனப் பசளை நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் கழிவுப் பொருளை சேகரிப்பதற்காக ரூபா 3,752,571 மூலதனச் செலவும் ரூபா 4,677,317 மீண்டுவரும் செலவும் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அச்செயற்திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு சபைக்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களிலிருந்து சேதனப் பசளை தயாரிக்கப்படாததுடன் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் | ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதுடன் மீண்டும் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக கேள்வி கோருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் முறைப்படியாக கழிவுப் பொருள் முகாமைத்துவத்தினை மேற்கொண்டு சேதனப் | உக்குகின்ற கழிவப் பொருட்களையும் உக்காத கழிவுப் பொருட்களையும் முறைப்படியாக முகாமைத:துவம் செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணியின் குழியில் போடுதல் இடம்பெற்றிருந்ததுடன் சேகரிக்கப்பட்டுகின்ற பிளாஸ்ரிக் காட்போர்ட் பொலிதீன் என்பன கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் காணியில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையத்தில் களஞ்சியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டது. | பசளையை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

### 3.4 யெற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் காணிகளை அபிவிருத்தி செய்து விற்பனை செய்யும் போது 06 காணித் துண்டுகள் தொடர்பாக விற்பனைப் பெறுமதியில் 1% ஆன வரிப் பணம் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் விற்பனைப் பெறுமதியை விட குறைந்த பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதனால் ரூபா 1,508,083 சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | ஏல விற்பனை செய்யும் நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு உரிய ஏல விற்பனை நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | விற்பனைப் பெறுமதிக்கு இணங்க 1% ஆன வரிப் பணம் அறவிடப்படுதல் வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிலுவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபை மீளாய்வாண்டின் போது சபை நிதியின் மூலம் 29 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ரூபா 15,494,698 தொகைக்கு உடன்படிக்கை செய்திருந்தும் ரூபா 1,562,170 பெறுமதியான 03 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இப்பாகமுவ பிரதேச சபையிடமிருந்து மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் மூலம் 29 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபையினால் நிர்மாண வேலைப் பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படுகின்ற | பாதீட்டு அறிக்கைக்கு முன்னர் 2022 செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதனால் பாதீட்டு அறிக்கையினைத் | நிர்மாண வேலைப் பிரிவின் உள்ளபடியான செயற்பாடுகளை இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்கள் தொடர்பாக உள்ளபடியான செயற்பாடுகளை இனங்கண்டு கிரயமதிப்பீட்டினைத் தயாரித்து அதற்கிணங்க திட்டங்கள் தயாரிக்கப்படாது பெயரளவிலான செயற்பாடுகளுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதனால் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளுக்கான முகாமைத்துவ கருவியாக செயல் நடவடிக்கைத் திட்டத்தினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | தயாரிக்கும் போது உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டம் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. அதனால் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்குரிய செயற்பாடுகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கிணங்க கிரய மதிப்பீட்டினைத் தயாரித்து செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |